# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 28–02–2018 புதன் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்புக் கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 28–02–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1 :

நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

### பொருள் எண் 2:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு–பி, பிளாக்–5, நகர அளவு எண்கள் 7/2A1Pt., 7/17 Pt–ல் (பழைய நில அளவு எண் 133/1B2 Pt) 205192.86 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017 ஆகியவற்றின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் மேற்கண்ட அனுமதியற்ற மனைப் பிரிவினை குடியிருப்பு மனைப் பிரிவாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளார். எனவே, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகளின்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் (கொ.ஓ.ம.வ./ந.ஊ.து.இ (தம) எண் 72/2017) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்காக்களை இனாம் சாசனம் மூலம் பெற்றுக்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அனுமதியற்ற மனைப் பிரிவுகளை வரன்முறை படுத்தும் அரசாணைகளுக்குட்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வழங்கியுள்ள கொள்கையளவு ஒப்புதலில், உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் தானப்பத்திரங்களாக நகராட்சி ஏற்கலாம்.

## பொருள் எண் 3:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் மற்றும் பலன்களை அனுபவிக்கும் குத்தகை இனங்களை 2018–19 முதல் 2020–21 வரையுள்ள காலங்களுக்கு மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 27.02.2018 தேதியில் கோரப்பட்டது. பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. மேற்கண்ட தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொண்ட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 270–ன்கீழ் நகராட்சி எல்லைக்குள் சரக்குகள் ஏற்றிவரும் வாகனங்கள் தெரு ஓரங்கள் வியாபாரம் செய்யும் இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு கீழ்க்கண்டுள்ள நபர்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரார் பெயர் (ம) முகவரி | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ஆண்டிற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | எல். கணேசன் த/பெ.டி.ஆர்.சம்மந்தம், பொன்னையன் செட்டித் தெரு, திருத்துறைப்பூண்டி | தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 270–ன்கீழ் நகராட்சி எல்லைக்குள் சரக்குகள் ஏற்றிவரும் வாகனங்கள் தெரு ஓரங்கள் வியாபாரம் செய்யும் இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 398000/– |
| 2. | எஸ்.பசுபதிகணேஷ், த/பெ., சோமசுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப்பூண்டி | | 406000/– |

மேற்படி குத்தகை இனத்திற்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை உறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) வரிசை எண் 02–ல் கண்டுள்ள திரு.எஸ்.பசுபதிகணேஷ் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த மூன்றாண்டு கால சராசரி தொகை ரூ.375152/–ஐ விட ரூ.30848/– கூடுதலாகவும், கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ.393600/–ஐ விட ரூ.12400/– கூடுதலாகவும் உள்ளதால், அன்னாரது அதிகப்பட்சத் தொகையினை மன்றம் உறுதி செய்யலாம்.

2) அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ள திரு.பசுபதிகணேஷ் என்பவருக்கு மேற்படி குத்தகை இனத்தை ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு 2018–19 முதல் 2020–21 வரையுள்ள காலங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

<u>ந.க.எண்.6966/2017/அ2)</u>

## பொருள் எண் 4:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் மற்றும் பலன்களை அனுபவிக்கும் குத்தகை இனங்களை 2018–19 முதல் 2020–21 வரையுள்ள காலங்களுக்கு மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 27.02.2018 தேதியில் கோரப்பட்டது. பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. மேற்கண்ட தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொண்டடு ஆடு அறுக்கும் தொட்டிக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு கீழ்க்கண்டுள்ள நபர்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் (ம) முகவரி | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ஆண்டிற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | எல். கணேசன் த/பெ.டி.ஆர்.சம்மந்தம், பொன்னையன் செட்டித் தெரு, திருத்துறைப்பூண்டி | ஆடு அறுக்கும் தொட்டிக் கான கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 36000/– |
| 2. | எஸ்.பசுபதிகணேஷ், த/பெ. சோமசுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப்பூண்டி | | 37000/– |

மேற்படி குத்தகை இனத்திற்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை உறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) வரிசை எண் 02–ல் கண்டுள்ள திரு.எஸ்.பசுபதிகணேஷ் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த மூன்றாண்டு கால சராசரி தொகை ரூ.33700/–ஐ விட ரூ.3300/– கூடுதலாகவும், கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ.35280/–ஐ விட ரூ.1720/– கூடுதலாகவும் உள்ளதால், அன்னாரது அதிகப்பட்சத் தொகையினை மன்றம் உறுதி செய்யலாம்.
2) அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ள திரு.பசுபதிகணேஷ் என்பவருக்கு மேற்படி குத்தகை இனத்தை ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு 2018–19 முதல் 2020–21 வரையுள்ள காலங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

<u>ந.க.எண்.6966/2017/அ2)</u>

## பொருள் எண் 5:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் மற்றும் பலன்களை அனுபவிக்கும் குத்தகை இனங்களை 2018–19 முதல் 2020–21 வரையுள்ள காலங்களுக்கு மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 27.02.2018 தேதியில் கோரப்பட்டது. பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. மேற்கண்ட தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொண்டு மீன் நாளங்காடி மற்றும் கசாப் கடைகளில் வசூல் செய்யும் உரிமைக்கு கீழ்க்கண்டுள்ள நபர்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் (ம) முகவரி | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ஆண்டிற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | எல். கணேசன் த/பெ.டி.ஆர்.சம்மந்தம், பொன்னையன் செட்டித் தெரு, திருத்துறைப்பூண்டி | மீன் நாளங்காடி மற்றும் கசாப் கடைகளில் வசூல் செய்யும் உரிமை | 193000/– |
| 2. | எஸ்.பசுபதிகணேஷ், த/பெ., சோமசுந்தரம், வடக்கு இராமமடத் தெரு, திருத்துறைப்பூண்டி | | 190500/– |

மேற்படி குத்தகை இனத்திற்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை உறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) வரிசை எண் 01–ல் கண்டுள்ள திரு.எல்.கணேசன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது கடந்த மூன்றாண்டு கால சராசரி தொகை ரூ.178642/–ஐ விட ரூ.14358/– கூடுதலாகவும், கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ.187428/–ஐ விட ரூ.5572/– கூடுதலாகவும் உள்ளதால், அன்னாரது அதிகப்பட்சத் தொகையினை மன்றம் உறுதி செய்யலாம்.
2) அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ள திரு.எல்.கணேசன் என்பவருக்கு மேற்படி குத்தகை இனத்தை ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு 2018–19 முதல் 2020–21 வரையுள்ள காலங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**ந.க.எண்.6966/2017/அ2)**

## பொருள் எண் 6 :

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளையும், மறு வரையறை ஆணையத்தின் விதி 23/2017ன்படி வார்டு மறு வரையறை செய்வதற்கான வரைவு தயார் செய்து மறுவரையறை ஆணையத்திற்கு ஒப்புதலுக்கு அனுப்ப ஏதுவாக ஆணையத்தின் வழிக்காட்டுதலின்படி படிவம் I(ஈ), II(ஈ), IV(ஈ), III(அ), III(ஆ) மற்றும் தனித் தனி வார்டுகளின் வரைபடம், ஒருங்கிணைந்த வரைபடம் ஆகியவை புத்தக வடிவில் தயார் செய்ய உத்தேச செலவினம் ரூ.75000/–க்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்டுள்ள நிறுவனங்களில்

| வ.எண் | பணியின் பெயர் | நிறுவனங்களின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | M.H.M. Rs. | GODL KEY Rs. | G-TECH Rs. |
| 1 | Town Map A2 Size | 240 | 250 | 280 |
| 2 | Ward Map A3 Size | 110 | 120 | 150 |
| 3 | Auto Card Ward Map தயாரித்தல் | 1200 | 1230 | 1250 |
| 4 | Auto Card town Map தயாரித்தல் | 8400 | 8800 | 8500 |

குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M.H.M.construction நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M.H.M.construction நிறவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கி பணி முடித்தமையினை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.4225/2017/எப்1)**

## பொருள் எண் 7 :

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் கொள்கையளவு ஒப்புதல் பெறப்பட்ட திருமதி.பரிமளாதேவி, கும்பகோணம் என்பவரின் அனுமதியற்ற மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்காவினை ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்திட இந்நகர்மன்ற தீர்மான எண் **244** நாள் **28.2.2018**ன்படி ஒப்புதல் பெறப்பட்டதின் அடிப்படையில், மேற்கண்ட மனைப்பிரிவின் உரிமையாளர் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் மூலம் பத்திரப்பதிவு செய்து வழங்கியுள்ளதை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொண்டும் வார்டு–பி, பிளாக்–**5**, நகர அளவு எண்கள் 7/2A1Pt,7/13 மற்றும் 7/17 Pt–ல் (பழைய நில அளவு எண் 133/1B2 Pt) **205192.86** சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறை செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1)** பத்திரப் பதிவு எண் **435/2018** நாள் **28.02.2018** மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா சாலை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கொள்கையளவு ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் நிறைவு செய்வதால் அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறை செய்து இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.6856/2017/எப்1)</u>**

## பொருள் எண் 8 :

இந்நகராட்சிக்கு சொந்தமான தச்சன்குளம் மீன்பாசி குத்தகையினை **2017–18**ஆம் ஆண்டிற்கு ஏலம் விடப்பட்டுள்ளதை ரத்து செய்யக்கோரி மேற்படி பாரதியார் தெருவில் வசிக்கும் திரு.எஸ். சதீஸ் த/பெ. கன்னையா என்பவர் நகராட்சிக்கு எதிராக திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.84/2017ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.பி.ஆனந்தன், பி.ஏ.பிஎல்., அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்தி வருகிறார் என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1)** அ.வ.எண்.84/2017–ல் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திவரும் நகராட்சி வழக்கறிஞர் திரு.டி. ஆனந்தன், பி.ஏ.பிஎல்., அவர்களுக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**2)** இவ்வழக்கு தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.6113/2017/அ2)</u>**

**பொருள் எண் 9:**

இந்நகராட்சியின் BSNL அகன்ற அலை வரிசை இணைப்பு (Broad Band) போதிய வேகம் இல்லாததால் புதிய ஏர்டெல் Broad Band இணைப்பு பெறுவதற்கும் அதற்கான கட்டணம் ரூ.3500/– செலுத்தவும், மாதாந்திர கட்டணம் தொடர்ந்து செலுத்தவும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.625/2018/இ2)**

**பொருள் எண் 10:**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15940/2015/டபுள்யூ.பி. நாள் 25.09.2017–ன்படி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு தனித் தனியே அலைபேசி ஏர்டெல் சட்ட சபை கூட்ட தொடருக்கான முக்கிய செய்தி பரிமாற்றம் செய்வதற்கு (Closed User Group ) CUG–க்கான மாதாந்திர கட்டணம் மாதா மாதம் பட்டியல்களில் கண்ட தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 628 /2018/இ2)**

**பொருள் எண் 11 :**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய இரண்டு பணியாளர்களை நியமிக்க நகராட்சி பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 2.2.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | நாள் விபரம் | கூலி விபரம் ரூ. |
|---|---|---|---|
| 1 | எஸ்.மங்கையர்கரசி | 1 நாள் | 258/– |
| 2 | பி. கண்ணன் | 1 நாள் | 265/– |
| 3 | எஸ். ஞானசுந்தரம் | 1 நாள் | 270/– |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 5.2.2018 அன்று வேலை உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.3530/2017/இ1)**

**பொருள் எண் 12:**

இந்நகராட்சிப் பகுதியிலுள்ள வார்டு எண் 1 மன்னை சாலையில் புதிதாக சமுதாய உரக்கொட்டகை ரூ.3.60இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண். 593/2018/இ1)</u>**

## பொருள் எண் 13:

இந்நகராட்சியின் உரக்கிடங்கு அமைந்துள்ள இடத்தில் புதிதாக சமுதாய உரக்கிடங்கு கொட்டகை ரூ.4.30இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண். 595/2018/இ1)</u>**

## பொருள் எண் 14:

இந்நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண் 17 மணிகண்டேஸ்வரர் கோவில் தெரு, வார்டு எண் 12 மீனாட்சி வாய்க்கால் கீழத் தெரு, வார்டு எண் 20 உப்புக்குளத் தெரு ஆகிய இடங்களில் புதிதாக குடிநீர் குழாய் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,40,000/–க்கும் இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண். 492/2018/இ1)</u>**

## பொருள் எண் 15:

இந்நகராட்சியின் வார்டு எண் 5 திருவாரூர் சாலையில் கொள்ளிடம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் பிரதான குடிநீர் குழாய் மிகவும் பழுதடைந்து குடிநீர் கசிந்து கொண்டிருப்பதால் மேற்கண்ட குழாயினை பழுதுபார்க்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,75,000/–க்கும் இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண். 717/2018/இ1)</u>**

## பொருள் எண் 16:

இந்நகராட்சியின் 21வது வார்டில் பெரியநாயகிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு போர்வெல் அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ.20,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண். 6548/2017/இ1)</u>**

**பொருள் எண் 17:**

திருத்துறைப்பூண்டி நகராட்சி தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் **2015–16**–ன்கீழ் பொதுசுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தக்கூடிய காம்பாக்டர் லாரி வாகனத்திற்கு பாடி கட்டுதல், இன்சூரன்ஸ் மற்றும் நிரந்தர பதிவு செய்யும் பணிகளுக்கு ரூ.**14.68**இலட்சம் மதிப்ஷபீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் **166** நாள் **31.08.2017**–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு **26.09.2017**–ந்தேதி புதன்கிழமை அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்/முகவரி | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் குறைவு/அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | Green Agro Environment services, Madurauthagam | 1468842/– | 1465000/– | 0.26% குறைவு |
| 2. | M.S. Enterprises, Chennai-87 | | 1500000/– | 2.12% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.26** குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள Green Agro Environment services, Madurauthagam என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**<u>ந.க.எண்.595/2015/இ1)</u>**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.